**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 26/2019**

பெயர் : மோகன்தாஸ் P.W.1.

த/பெ. : முத்தையன்

தேதி : 01.12.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை: –**

1. வாசாஆ 8 ஆன ஆவணம் 01.11.1975 முதல் 01.11.2022 வரைக்கான வில்லங்க சான்றிதழ் என்றால் சரிதான். வாசாஆ 1 ஆன ஆவணத்தின் பதிவெண் 510/1995 என்றால் சரிதான். வாசாஆ 8 ஆன ஆவணத்தில் 21 வது பதிவு எண்.137/1993 என குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு அடுத்த பதிவு 511/1995 என உள்ளது என்றால் சரிதான். நான் வசந்தி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்ததாக சொல்லும் பதிவு 510/1995 என்றால் சரிதான். அந்த பதிவு வாசாஆ 8 ஆன ஆவணத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். வாசாஆ 8ல் உள்ள 22வது பதிவின் கீழ் தான் நான் தாவா சொத்தை வசந்தி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்ததாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 8 ஆன ஆவணத்தில் 22வது பதிவில் சர்வே எண். 457/1, 458/3 என கண்டுள்ளது என்றால் சரிதான்.

2. வாசாஆ 8 ஆவணத்தை நான் தான் வாங்கினேன். நான் வசந்தி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்த புல எண் 458/15 என்பது வாசாஆ 8 ஆன ஆவணத்தில் காணப்படவில்லை என்பது குறித்து நான் சார் பதிவாளர் அலுவலகத்தில் சென்று கேட்டேனா என்றால் இல்லை. வாசாஆ 1 ஆன ஆவணத்தில் தாவா சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது என்று சொல்லப்படவில்லை என்றால் எனக்கு பாக அடிப்படையில் கிடைத்ததாக சொல்லப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் வாசாஆ 1 ஆன ஆவணத்தில் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றாலும், நான் மேற்படி ஆவணத்தை வசந்தி என்பவருக்கு எழுதிக்கொடுப்பதற்கு எந்த அருகதையும் இல்லை என்றாலும் சரியல்ல. வாசாஆ 1 ஆன ஆவணம் மோசடியான ஆவணம் என்றாலும் அந்த ஆவணத்தின் கீழ் எனக்கோ வசந்திக்கோ எவ்வித உரிமையோ கிடைக்கதக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

3. வாசாஆ 2 ஆன ஆவணம் மூலம் தாவா சொத்தை மீண்டும் ரூ.2000/– கொடுத்து கிரயம் பெற்றுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. புல எண்.458/15ன் மொத்த விஸ்தீரணம் 18.5 ஏர்ஸ் என்றால் சரிதான். அவ்வாறு உள்ள

நிலையில் வாசாஆ 2 ஆன ஆவணம் மூலம் மேற்படி விஸ்தீரணத்தில் ஒரு பகுதியான 5 செண்ட் நிலத்தை மட்டுமே நான் கிரயம் பெற்றுவிட்டு மேற்படி ஆவணத்தில் நான்கெல்லையில் பூரா என கண்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாசாஆ 2 ஆன ஆவணத்தின் மூலம் எனக்கு சொத்துரிமை கிடையாது என்றாலும், எனக்கு கி்ரயம் கொடுத்த வசந்தி என்பவருக்கும் மேற்படி சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. வாசாஆ 1, வாசாஆ 2, வாசாஆ 8 ஆகிய ஆவணங்கள் மோசடியான ஆவணங்கள் என்றாலும் அதன் மூலம் பிரதிவாதியின் சொத்தை நான் அபகரிப்பதற்கான நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அதனால் எனக்கு எந்த பரிகாரமும் இந்த வழக்கில் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.